[1981 ஏப்ரல் 27

கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்ற முறைகேடுகள்.

* 908 வினா.—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இறந்துபோன அரிசனங்களின் ஈமச்சடங்கிற்காக அரசு ஒதுக்கிய மானியப் பணத்தில் கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் மோசடி நடைபெற்றுள்ளதாக அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இதுபற்றிய விவரம் என்ன ?

(இ) சம்பந்தப்பட்டவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது .

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) ஆள் மாறாட்டம் நடத்தி போலி கிராம அதிகாரி சான்றுகளுடன் 20 பஞ்சாயத்துக்களின் 317 பேருக்கு நிதி உதவி செய்ததாக கணக்கு காட்டி ரூ. 15,850 கையாடல் செய்யப்பட்டுள்ளது.

(இ) இந்த மோசடிக்கு காரணகர்த்தாவாக இருந்த பகுதி நேர பஞ்சாயத்து எழுத்தர் தற்காலிகமாக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அந்த எழுத்தர் மீது தக்க நடவடிக்கை எடுக்க காவல்துறையில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ததால், காவல்துறை இதுபற்றி புலன் விசாரணை செய்து வருகிறது.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு, வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் ஒரு பழமொழி சொல்வார்கள். 'செத்தவன் வாயில் இருந்து கூட வாக்கரிசி எடுப்பான் என்று' அதைப்போல, செத்தவனுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை சாகாதவனுக்கு ஒதுக்கி எடுத்துக்கொண்டு, அவன் செத்ததற்குப் பிறகு விண்ணப்பித்தபோது இந்தத் தவறு கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட தவறு செய்த அதிகாரி மீது வெறும் போலீஸ் நடவடிக்கையோடு நிறுத்தாமல், அவரைப் பதவியில் இருந்து டிஸ்மிஸ் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையில் இருந்து விரிவான அறிக்கை பெற்றவுடன் கண்டிப்பாக அவர் மீது கடுமையான நடவடிக்கையை அரசு எடுக்கும்.

1981 ஏப்ரல் 27]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, நான் தெரிந்துகொள்ள விரும்புவது எல்லாம், காவல் துறை புலன் விசாரணை ஒரு பக்கம் இருக்கட்டும். சம்பந்தப்பட்ட கிராம அதிகாரி மட்டும் தவறு செய்ய வில்லை. எனக்குக் கிடைத்த தகவல்படி, அந்த கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையாளரும் இதிலே சம்பந்தப்பட்டு இருக்கிறார். இந்த நிலைமையில் அவர் தொடர்ந்து பதவியில் இருக்கிறாரா ? அப்படியானால், செத்தவன் வாயில் இருந்து வாக்கரிசி எடுக்கும் நிலையை அரசு இன்னும் தொடர்ந்து அனுமதித்துக் கொண்டு இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, என்னிடத்தில் உள்ள தகவலின்படி அந்தப் பஞ்சாயத்து ஆணையாளருக்கு இதிலே சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த விசாரணையின்போது திரு. தயாளமூர்த்தி என்ற பகுதி நேர பஞ்சாயத்து எழுத்தர் தான் போலிச் சான்றிதழ் தயாரித்து அளித்ததன்மூலம் கையாடல் செய்து இருக்கிறார் என்று தகவல் இருக்கிறது. அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. அவர் தற்காலிகமாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார். விரிவான அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, இறந்துபோன அரிசனங்கள் ஈமச்சடங்கு செய்வதற்காக ரூ. 50 பஞ்சாயத்து நிதியில் இருந்து கொடுப்பதாக சொல்கிறார்கள். பஞ்சாயத்துக்களின் நிதிநிலை நெருக்கடி காரணமாக அவர்களிடத்தில் சில நேரங்களில் பணம் கிடைப்பதில்லை. அதிலும் சில நேரங்களில் அங்கே பஞ்சாயத்து அதிகாரிகள் இல்லாவிட்டால் உடனடியாகப் பணம் கிடைப்பது இல்லை. ஆகவே, இந்த உதவித் தொகை வழங்கும் பொறுப்பை தாசில்தாரிடம் கொடுத்து, ரூ. 100 என்கிற அளவிற்கு அந்தத் தொகையை குறைந்த பட்சம் உயர்த்துவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 ரூபாய் கொடுப்பதை 100 ரூபாய் என்று உயர்த்துவதற்கு அரசு இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. அவ்வாறு உயர்த்துகின்ற எண்ணம் தற்போது அரசுக்கு இல்லை. எனினும் மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதுபோன்று, தாசில்தாரிடம் அந்தப் பொறுப்பைத் தரலாமா என்பதை அரசு பரிசிலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தவைலர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]